ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2261/50 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06
2261/50 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரோஹித அபேகுணவர்தன,**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில்
*அமைச்சர்.*

கொழும்பு,
*2021, திசெம்பர் 29.*

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (நிர்மாணம் - கட்டமைப்பு, உட்பிரிவிடுகையும் நிலையுறுதியும், எந்திரத்தொகுதி மற்றும் மின்சார நிறுவுகைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1A - G 35889 — 510 (2022/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் II - 1, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம், அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட அடுத்துப்பின்னரான ஏதேனும் திருத்தம் என்பவற்றுக்குப் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

## பாகம் I

## இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையதாந்தன்மை

2. (1) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதிகளின் (2), (3), (4) மற்றும் (5) இன் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையவையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ளவையுமான கப்பல்களுக்கும் மற்றும் வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) (இவ்வொழுங்குவிதிகளில் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் என்பவற்றில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) போர்க்கப்பல்களுக்கும் படைக்குழுவினர் கப்பல்களுக்கும்;

(ஆ) 500 முழுமொத்தத் தொன்னளவுக்கும் குறைவான சரக்குக் கப்பல்களுக்கும்;

(இ) பொறிமுறை வழிவகைகள்மூலம் உந்தப்படாத கப்பல்களுக்கும்;

(ஈ) தொன்மையான கட்டமைப்பைக்கொண்ட மரக்கப்பல்களுக்கும்;

(உ) வியாபாரத்தில் ஈடுபட்டிராத பொழுதுபோக்கு உலாப்படகுகளுக்கும்; அத்துடன்

(ஊ) மீன்பிடிக் கலன்களுக்கும்;

(3) சமவாயத்தில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறுதவிர, இவ்வொழுங்குவிதிகள், 2009 சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் எந்தக் கப்பல்களின் அடிக்கட்டைகள் இடப்படுகின்றனவோ அல்லது நிர்மாணத்தின் ஒத்த கட்டத்தில் உள்ளனவோ அந்தக் கப்பல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) சமவாயத்தில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, 2009 சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்கள், சமவாயத்தின் அத்தியாயம் II - I இன் 1 (2) ஆம் ஒழுங்குவிதிக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) சமவாயத்தின் அத்தியாயம் V இல் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், வட அமெரிக்காவின் பெரிய ஏரிகளிலும் சென்ட் லோரன்ஸ் ஆற்றிலும், கேப் டெங் ரொசியேர்ஸிலிருந்து அன்ட்டிகொஸ்ட்டி தீவு, மேற்குப் புள்ளிவரையும், அன்ட்டிகொஸ்ட்டி தீவின் வடபுறத்தில் 63 ஆம் உச்சவரையிலிருந்தும் வரையப்பட்டவொரு நேர்க்கோடாகக் கிழக்குவரை மட்டுமே நீர்வழிப்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற இலங்கைக் கப்பல்களுக்கு ஏற்புடையனவாதலாகாது.

3. பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள், திரிபுகள் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட வெளிப்பொருத்திகளுக்கு உட்படுத்தப்படுகின்ற எல்லாக் கப்பல்களும், ஆகக்குறைந்தது இக்கப்பல்களுக்கு முன்னர் ஏற்புடையனவாகவிருந்த தேவைப்பாடுகளுக்கேனும் தொடர்ந்து இணங்கியொழுகுதல் வேண்டும். அத்தகைய கப்பல்கள், இயைபான எவையேனும் திருத்தங்கள் வலுவுக்கு வரும் தேிகக்கு முன்னர் நிர்மாணிக்கப்படின், விதியொன்றாக, அவை அத்தகைய பழுதுபார்த்தல்கள், மாற்றங்கள், திரிபுகள் அல்லது வெளிப்பொருத்திகளுக்கு உட்படுமுன்னர் ஆகக்குறைந்தது அதே அளவுக்கேனும் அத்திகதியன்று அல்லது அத்திகதிக்குப்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட

கப்பல்களுக்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். பாரிய பண்பினவான பழுதுபார்த்தல்களும், மாற்றங்களும், திரிபுகளும் அவைதொடர்பான வெளிப்பொருத்திகளும், பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமானதும் செயல்முறைக்குகந்ததுமெனக் கருதுகின்றவாறான அளவுக்கு, இயைபான எவையேனும் திருத்தங்கள் எத்திகதியன்று அல்லது எத்திகதிக்குப்பின்னர் வலுவுக்கு வருகின்றனவோ அத்திகதியன்று அல்லது அத்திகதிக்குப்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களுக்கான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதல் வேண்டும்.

4. (1) வழமையாகச் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபடாததும் ஆனால் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தனியொரு சர்வதேசக் கடற்பயணத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவைப்படுத்தப்படுவதுமான கப்பலொன்று, (இவ்வொழுங்குவிதிகளில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுள் எவற்றிலிருந்தும் விலக்களிக்கப்படலாம்;

ஆயின், கப்பலினால் பொறுப்பேற்கப்படவுள்ள கடற்பயணத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் போதியனவாகவுள்ள காப்புத் தேவைப்பாடுகளுக்கு அத்தகைய கப்பல் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) புதிய வகையினவான சிறப்புக்கூறுகளைக் கொண்டுள்ள ஏதேனும் கப்பலுக்கு, பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் அத்தியாயங்கள் II-I, II-2, III மற்றும் IV என்பவற்றின் பிரயோகம் தொடர்பான ஏற்பாடுகளுள் எவையும் அத்தகைய சிறப்புக்கூறுகளின் அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சியையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களில் அவை சேர்க்கப்படுவதனையும் பாரதூரமானமுறையில் தடைசெய்யக்கூடியனவாகவுள்ள அத்தகைய ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கப்பல்கள், பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் அவை எந்தச் சேவைகளுக்காக உட்கருதப்படுகின்றனவோ அந்தச் சேவைக்குப் போதியனவாகவுள்ளனவும், கப்பலின் ஒட்டுமொத்தக் காப்பை உறுதிப்படுத்தக்கூடிய அத்தகையனவாகவுள்ளனவும், கப்பல் செல்லவேண்டிய அரசுகளின் அரசாங்கங்களினால் ஏற்கத்தக்கனவாகவுள்ளனவுமான காப்புத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) கடற்பயணத்தின் பாதுகாப்பளிக்கப்பட்ட தன்மையும் நிலைமைகளும் சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் குறிப்பிட்ட எவையேனும் தேவைப்பாடுகளின் பிரயோகத்தை நியாயமற்றனவாக்கும் அல்லது அவசியமற்றனவாக்கும் அத்தகையனவாகவுள்ளனவெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருதினால், அவர், எந்தத் தனிப்பட்ட இலங்கைக் கப்பல்கள் அல்லது வகுப்பினவான இலங்கைக் கப்பல்கள் அவற்றின் கடற்பயணத்தின்போது மிகக்கிட்டிய நிலப்பரப்பிலிருந்து 20 மைல்களுக்கு மேற்படச் செல்லாதிருக்கின்றனவோ அந்தத் தனிப்பட்ட இலங்கைக் கப்பல்களுக்கு அல்லது வகுப்பினவான இலங்கைக் கப்பல்களுக்கு அத்தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின்கீழ் கப்பலொன்றுக்கு விலக்களிக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதி, (இவ்வொழுங்குவிதிகளில் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புக்கு அதுபற்றிய விபரங்களையும் அதற்கான காரணங்களையும் அறிவித்தல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதிகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விலக்களிப்புகள், 2022 ஆம் ஆண்டு 01 ஆம் மாதம் 16 ஆந் திகதிய 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் விவரணத்தினதான கப்பலொன்று தொடர்பாக அதன் இயைபான தேவைப்பாடுகளை விட்டுக்கொடுக்கலாம்; ஆயின், அத்தகைய கப்பல், சமவாயத்தின் அத்தியாயம் II-I இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அல்லது அத்தகைய ஏற்பாடு நியாயமற்றது அல்லது செயல்முறைக்குகந்ததல்லதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படுமிடத்து மாற்றுத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(7) சமவாயத்தின் அத்தியாயம் II-I இனால் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரமொன்று அல்லது வகைசார்ந்த அங்கீகாரமொன்று அல்லது சமவாயத்தின் அத்தியாயம் II-I இனால் அனுமதிக்கப்பட்ட சமமான ஒழுங்கேற்பாடு அல்லது விட்டுக்கொடுப்பொன்று-

(அ) எழுத்திலிருப்பின்;

(ஆ) அது பயனுக்குவரும் திகதியைக் குறிப்பிடின்; அத்துடன்

(இ) அதிற் குறிப்பிடப்பட்ட எவையேனும் நிபந்தனைகள் இணங்கியொழுகப்படின்

மட்டுமே செல்லுபடியாகவுள்ளது.

(8) பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமான அறிவித்தல் கொடுப்பதன்மீது, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை, அங்கீகாரத்தை அல்லது விட்டுக்கொடுப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

5. யாத்திரிகர் தொழில்போன்ற, பெரும் எண்ணிக்கையினரான விசேட தொழிற் பயணிகளை ஏற்றிச்செல்வதற்கான விசேட தொழில்களில் தொழிலுக்கமர்த்தப்பட்ட பயணிக் கப்பல்களின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி சமவாயத்தின் அத்தியாயம் II - 1 இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை வலுவுறுத்துவது செயல்முறைக்குகந்ததல்லதெனத் திருப்திப்படின் அத்தகைய கப்பல்களுக்கு அத்தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்; ஆயின், அவை பின்வருவனவற்றின் ஏற்பாடுகளுக்கு முழுமையாக இணங்கியொழுகுதல் வேண்டும்:-

(i) 1971 ஆம் ஆண்டின் விசேட தொழிற்பயணிக் கப்பல்கள் உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்ட விதிகளுடனும்; அத்துடன்;

(ii) 1973 ஆம் ஆண்டின் விசேட தொழிற்பயணிக் கப்பல்களுக்கான இடவசதித் தேவைப்பாடுகள் பற்றிய வரைவாவணத்துடன் இணைக்கப்பட்ட விதிகளுடனும்.

## பாகம் II

### கப்பலிகளின் கட்டமைப்பு

6. சமவாயத்தின் அத்தியாயம் II - I இன் விவரணத்தினதான ஒரு கப்பல் தொடர்பாக அதன் தேவைப்பாடுகளுக்கும் அத்துடன் மேலதிகமாக, பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் கட்டமைப்புச்சார், பொறிமுறைசார் மற்றும் மின்சாரத் தேவைப்பாடுகளுக்கும் இணங்க, கப்பலொன்று வடிவமைக்கப்படுதலும், நிர்மாணிக்கப்படுதலும், சாதனமிடப்படுதலும், பேணப்படுதலும் வேண்டும்.

## பாகம் III

### உட்பிரிவிடுகையும் நிலையுறுதியும்

7. (1) சமவாயத்தின் அத்தியாயம் II - I இன் விவரணத்தினதான ஒரு கப்பல் தொடர்பாக அதன் பாகம் B மற்றும் பாகம் B - I இல் குறித்துரைக்கப்பட்டவாறான உட்பிரிவிடுகை மற்றும் நிலையுறுதித் தேவைப்பாடுகளுடன் கப்பலொன்று இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) அளவைப் பொருட்படுத்தாது ஒவ்வொரு பயணிக் கப்பலினதும் மற்றும் 24 மீற்றரும் அதற்கு மேற்பட்டதுமான நீளத்தை (நீ) கொண்ட ஒவ்வொரு சரக்குக் கப்பலினதும் நிலையுறுதி அம்சங்கள், அது பூர்த்திசெய்யப்பட்டதன்மீது தீர்மானிக்கப்படுதல் வேண்டும். தற்போதைய ஒழுங்குவிதிகளின் வேறெவையேனும் ஏற்புடையனவான தேவைப்பாடுகளுடன் சேர்த்து மேலதிகமாக 2010 யூலை 1 ஆந்திகதியன்று அல்லது அதன்பின்னர் நிர்மாணிக்கப்பட்ட 24 மீற்றரும் அதற்கு மேற்பட்டதுமான நீளத்தைக்கொண்ட கப்பல்கள், குறைந்தபட்சமாக 2008 ஆம் ஆண்டின் சேதமடையாத நிலையுறுதி பற்றிய சர்வதேசச் சட்டக்கோவையின் பாகம் A இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். 2010 யூலை 1 ஆந்திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்கள், சர்வதேசச்

கடலோர ஒழுங்கமைப்புத் தீர்மானம் A. MSC. 75 *(69)* இனால் திருத்தப்பட்டவாறான சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புத் தீர்மானம் A. *749 (18)* இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

*(3)* சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் ஒழுங்குவிதி 5- *1* இல் குறித்துரைக்கப்ட்ட ஏற்புடையனவான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொகுழுகக் கப்பல் தொடர்பான நிலையுறுதித் தகவல் கப்பற்றலைவருக்கு வழங்கப்படுதல் வேண்டும். நிலையுறுதித் தகவலின் பிரதியொன்று பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துவப்படுதல் வேண்டும்.

*8.* சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் விவரணத்தினதான கப்பலொன்று தொடர்பாக அதன் பாகம் B - 2 இல் குறித்துரைக்கப்பட்ட உட்பிரிவிடுகை, நீர்ப்புகாத்தன்மை, காலநிலையினால் பாதிக்கப்படாத்தன்மை ஒழுங்குத் தேவைப்பாடுகளுக்கிணங்கக் கப்பலொன்று வடிவமைக்கப்படுதலும், நிர்மாணிக்கப்படுதலும், சாதனமிடப்படுதலும், பேணப்படுதலும் வேண்டும்.

*9.* *(1)* உட்பிரிவிடுகையின் தேவைப்பட்ட அளவைப் பேணுவதற்கென, அங்கீகரிக்கப்பட்ட உட்பிரிவிடுகை நீர் அழத்துக்கு நேரொத்த சுமைவரையொன்று, பயணிக் கப்பல்களின் கப்பற்பக்கங்களில் குறித்தளிக்கப்பட்டு அடையாளமிடப்படுதல் வேண்டும். மாற்றுத் தொழிற்பாட்டு முறைகளுக்காக உட்கருதப்பட்ட பயணிக் கப்பலொன்று, கப்பற்சொந்தக்காரர்கள் விரும்பினால், மாற்றுச் சேவை உருவமைப்புகளுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி அங்கீகரிக்கக்கூடிய உட்பிரிவிடுகை நீர் ஆழங்களுக்கு நேரொத்தனவாகவிருப்பதற்குக் குறித்தளிக்கப்பட்டு அடையாளமிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலதிகச் சுமைவரைகளைக் கொண்டிருக்கலாம், அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு சேவை உருவமைப்பும் வேறு தொழிற்பாட்டு முறைகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகளுக்குத் தனியாக, சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் பாகம் B - 1 இற்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

*(2)* குறித்தளிக்கப்பட்டு அடையாளமிடப்பட்ட உட்பிரிவிடுகைச் சுமைவரைகள் பயணிக் கப்பல் காப்புச் சான்றிதழில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் பிரதான பயணிச்சேவை உருவமைப்புக்காக P*1* என்ற குறிப்பினாலும் மாற்று உருவமைப்புகளுக்காக P*2*, P*3* முதலியவற்றினாலும் வேறுபிரித்துக்காட்டப்படுதலும் வேண்டும். பிரதான பயணி உருவமைப்பு, எந்தத் தொழிற்பாட்டு முறையில் தேவைப்படுத்தப்பட்ட உட்பிரிவிடுகைச் சுட்டி R உச்சப்பெறுமதியைக் கொண்டிருக்குமோ அந்தத் தொழிற்பாட்டு முறையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*(3)* இச்சுமைவரைகளுள் ஒவ்வொன்றுக்கும் நேரொத்ததாகவுள்ள கப்பல்தளத்திற்கும் நீர்மட்டத்துக்கும் இடையேயான தூரம், வலுவிலுள்ள சுமைவரைகள் பற்றிய சர்வதேசச் சமவாயத்துக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட கப்பல்தளத்திற்கும் நீர்மட்டத்துக்கும் இடையேயான தூரம் போன்று அதே நிலையிலும் அதே கப்பற்றளச் சுமைவரையிலிருந்தும் அளவீடு செய்யப்படுதல் வேண்டும்.

*(4)* ஒவ்வோர் உட்பிரிவிடுகைச் சுமைவரைக்கும் நேரெத்ததாகவுள்ள கப்பல்தளத்திற்கும் நீர்மட்டத்துக்கும் இடையேயான தூரமும், அது எந்தச் சேவை உருவமைப்புக்காக அங்கீகரிக்கப்படுகின்றதோ அந்தச் சேவை உருவமைப்பும், பயணிக் கப்பல் காப்புச் சான்றிதழில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்.

*(5)* கப்பலின் வலிமையினால் அல்லது வலுவிலுள்ள சுமைவரைகள்பற்றிய சர்வதேசச் சமவாயத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறு உப்புத் தண்ணீரில் மிக்க ஆழமான சுமைவரைக்குமேல் ஏதேனும் உட்பிரிவிடுகைச் சுமைவரை அடையாளம் எவ்விடயத்திலும் இடப்படுதலாகாது.

*(6)* உட்பிரிவிடுகைச் சுமைவரை அடையாளங்களின் நிலை எத்தகையதுமாக விருப்பினும், வலுவிலுள்ள சுமைவரைகள்பற்றிய சர்வதேசச் சமவாயத்துக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறாகப் பருவகாலத்துக்கும் இடப்பிரதேசத்திற்கும் தோதான சுமைவரை அடையாளம் அமிழ்ந்து போகும்வகையில் பயணிக் கப்பலொன்று எவ்விடயத்திலும் சுமையேற்றப்படுதலாகாது.

*(7)* பயணிக் கப்பலொன்று உப்புத் தண்ணீரிலுள்ளபோது குறிப்பிட்ட கடற்பயணத்துக்கும் சேவை உருவமைப்புக்கும் தோதான உட்பிரிவிடுகைச் சுமைவரை அடையாளம் அமிழ்ந்துபோவதற்கு எவ்விடயத்திலும் அது அவ்வாறு சுமையேற்றப்படுதலாகாது.

## பாகம் IV

### நிலையுறுதி முகாமை

*10. (1) சமவாயத்தின் அத்தியாயம் II - I இன் விவரணத்தினதான கப்பலொன்று தொடர்பாக அதன் பாகம் B - 4 இல் குறித்துரைக்கப்பட்டவாறான நிலையுறுதி முகாமைத் தேவைப்பாடுகளுக்குக் கப்பலொன்று இணங்கியொழுகுதல் வேண்டும்.*

*(2) கப்பலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் வழிகாட்டுகைக்காக, நீர்வழிப்போக்குவரத்துப் பாலத்தில், நீர்ப்புகா அடைப்புகளின் எல்லைகளும், மூடிவிடுவதற்கான வழிவகைகளுடன் அவற்றின்கண்ணுள்ள துவாரங்களும் அவற்றின் எவையேனும் கட்டுப்பாடுகளுக்கான நிலையும், வெள்ளப்பெருக்குக் காரணமாக ஏதேனும் நிரலைத் திருத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகளும் என்பவற்றை ஒவ்வொரு கப்பற்றளத்துக்காகவும் சரக்கிடத்துக்காகவும் தெளிவாகக் காட்டுகின்ற வரைபடங்கள் நிரந்தரமாக வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும் அல்லது உடனடியாகக் கிடைக்கக்கூடியனவாதல் வேண்டும், மேலதிகமாக, மேற்குறிப்பிடப்பட்ட தகவலைக் கொண்டுள்ள சிறுநூல்கள் கப்பலின் அலுவலர்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டும்.*

*(3) நீர்வழிப்போக்குவரத்தின்போது திறந்து வைத்திருக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட பயணிக் கப்பல்களிலான நீர்ப்புகாக் கதவுகள், கப்பலின் நிலையுறுதித் தகவலில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்.*

*(4) சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் பாகம் B - 1 இன் சேத நிலையுறுதித் தேவைப்பாடுகள் ஏற்புடையனவாகவுள்ள கப்பல்களின் விடயத்தில், சேத நிலையுறுதித் தகவல், ஓர் அடைப்பை அல்லது அடைப்புகளின் தொகுதியை உட்படுத்துகின்ற எல்லாச் சேத விடயங்களிலும் கப்பலின் நிலைத்துநிற்கும் தன்மையை மதிப்பீடு செய்யும் எளிமையான மற்றும் இலகுவான விளங்கத்தக்க வழியில் கப்பற்றலைவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.*

## பாகம் V

### எந்திரத்தொகுதியும் மின்சார நிறுவுகைகளும்

*11. சமவாயத்தின் அத்தியாயம் II - I இன் விவரணத்தினதான கப்பலொன்று தொடர்பாக அதன் பாகம் C இல் குறித்துரைக்கப்பட்ட.*

*(அ) கப்பல் எந்திரத்தொகுதி நிறுவுகைகள் மற்றும் சாதனம்;*

*(ஆ) கப்பல் எந்திரத்தொகுதி மற்றும் சாதனத்துக்காகத் தொழிற்பாட்டு, பேணுகை அறிவுறுத்தல்களும் பொறியியல் வரைதல்களும்;*

*பற்றிய ஏற்புடையற்பாலனவான தேவைப்பாடுகளுக்குக் கப்பலொன்று இணங்கியொழுகுதல் வேண்டும்.*

*12. சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் விவரணத்தினதான கப்பலொன்று தொடர்பாக அதன் பாகம் D இல் குறித்துரைக்கப்பட்ட கப்பல் மின்சார நிறுவுகைகள் பற்றிய ஏற்புடையனவான தேவைப்பாடுகளுக்குக் கப்பலொன்று இணங்கியொழுகுதல் வேண்டும்.*

## பாகம் VI

### காலத்துக்குக்காலம் கவனிக்கப்படாதுள்ள எந்திரத்தொகுதி இடைவெளிகளுக்கான மேலதிகத் தேவைப்பாடுகள்

*13. (1) காலத்துக்குக்காலம் கவனிக்கப்படாதுள்ள எந்திரத்தொகுதி இடைவெளிகளைக் கொண்டுள்ள சரக்குக் கப்பலொன்று, சமவாயத்தின் அத்தியாயம் II - I இன் E என்னும் பாகத்திலுள்ள ஒழுங்குவிதிகளிற் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குக்காலம் கவனிக்கப்படாதுள்ள எந்திரத்தொகுதி இடைவெளிகள் பற்றிய ஏற்புடையனவான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.*

(2) பயணிக் கப்பலொன்றின் எந்திரத்தொகுதி இடைவெளிகள் காலத்துக்குக்காலம் கவனிக்கப்படாதுள்ளனவாக இருக்கலாமா அல்லவா என்பதுபற்றியும் அவ்வாறாயின் வழமையாகக் கவனிக்கப்படும் எந்திரத்தொகுதி இடைவெளிகளைப் போன்று சமமான காப்பை எய்துவதற்கு இவ்வொழுங்குவிதிகளில் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு மேலதிகமான தேவைப்பாடுகள் அவசியமாகவுள்ளனவா என்பது பற்றியும் பணிப்பாளர் தலைமையதிபதினால் விசேடமாகக் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய தேவைப்பாடுகள் நடைமுறைப்படுத்தல் நியமங்கள் என்றவகையாகக் கொடுக்கப்படும்.

## பாகம் VII

### மாற்று வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும்

14. (1) எந்திரத்தொகுதி, மின்சார நிறுவுகைகள் மற்றும் குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருள் களஞ்சியப்படுத்துகை, விநியோகிப்பு முறைமைகள் வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும், சமவாயத்தின் அத்தியாயம் II - I இன் பாகங்கள் C, D, E அல்லது G இல் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளிலிருந்து விலகலாம்; ஆயின், மாற்று வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும் சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகளின் உட்கருத்தை எதிர்கொள்ளவேண்டுமென்பதுடன் சமவாயத்தின் அத்தியாயம் II - I இற்குச் சமமான காப்பு மட்டத்தை வழங்குதலும் வேண்டும்.

(2) மாற்று வடிவமைப்பு அல்லது ஒழுங்கேற்பாடுகள், பாகம் C, D, E அல்லது G இன் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளிலிருந்து விலகும்போது, வடிவமைப்பினதும் ஒழுங்கேற்பாடுகளினதும் பொறியியற் பகுப்பாய்வும், மதிப்பீடும், அங்கீகாரமும், சமவாயத்தின் அத்தியாயம் இன் II - I 55 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மாற்று வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும் சம்பந்தமான தொடர்புபட்ட தகவலை எல்லா ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கங்களுக்கும் சுற்றிவழங்குவதற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

## பாகம் VIII

### குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற கப்பல்கள்

15. (1) உப ஒழுங்குவிதிகள் (4) மற்றும் (5) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, பின்வரும் சந்தர்ப்பங்களில் குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற கப்பல்களுக்கு இப்பாகம் ஏற்புடையதாதல் வேண்டும்:-

(அ) அதற்கான கட்டிட ஒப்பந்தம் 2017, சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் இடப்படுகின்றது;

(ஆ) ஒரு கட்டிட ஒப்பந்தம் இல்லாதபோது, அதன் அடிக்கட்டைகள் 2017, யூலை 1 ஆந்திகதியன்று அல்லது அதன்பின்னர் இடப்படுகின்றன அல்லது நிர்மாணத்தின் ஒத்த கட்டத்திலுள்ளன: அல்லது

(இ) அதன் ஒப்படைப்பு 2021, சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் நடைபெறுகின்றது.

குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற அத்தகைய கப்பல்கள், சமவாயத்தின் ஏற்புடையனவான வேறெவையேனும் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக இப்பாகத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதிகள் (4) மற்றும் (5) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, 2017, சனவரி 1 ஆந்திகதியன்று அல்லது அதன்பின்னர் குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துவதற்கு மாறுகின்றதும், 2009, சனவரி 1ஆந்திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஒன்றுட்பட்டதுமான கப்பலொன்று, நிர்மாணத் திகதியைப் பொருட்படுத்தாது, அத்தகைய மாற்றம் தொடங்கிய திகதியன்று குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற கப்பலொன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*(3) உப ஒழுங்குவிதிகள் (4) மற்றும் (5) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, 2009, சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஒன்றுபட்டதும், நிர்மாணத் திகதியைப் பொருட்படுத்தாது, குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்றதும் 2017, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் 2017, சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் பயன்படுத்துவதற்கு அது தொடக்கத்தில் அங்கீகரிக்கப்பட்டவற்றிலிருந்து வித்தியாசப்படும் குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துவதற்குப் பொறுப்பேற்கின்றதுமான கப்பலொன்று, அத்தகைய பொறுப்பேற்பு தொடங்கிய திகதியிலிருந்து குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற கப்பலொன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

*(4) சமவாயத்தின் அத்தியாயம் VII இல் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, இப்பாகம் 1, பின்வருவனவற்றைச் செய்கின்ற வாயுக் கப்பல்களுக்கு ஏற்புடையதாதலாகாது:*

*(அ) சமவாயத்தின் அத்தியாயம் VII இல் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, அவற்றின் சரக்குகளை எரிபொருளாகப் பயன்படுத்தி சர்வதேச வாயு ஏற்றிச்செல்லல் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றமை; அல்லது*

*(ஆ) அத்தகைய வாயுரீதியிலான எரிபொருட்களுக்கான எரிபொருள் களஞ்சியப்படுத்துகை மற்றும் விநியோகிப்பு முறைமை வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும் சரக்காக வாயுக்கான சர்வதேச வாயு ஏற்றிச்செல்லல் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வகையில் வேறு குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி வாயுரீதியிலான எரிபொருட்களைப் பயன்படுத்துகின்றமை.*

(5) ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டவையும் அல்லது தொழிற்படுத்தப்பட்டவையும், அப்போதைக்கு, அரசாங்க வர்த்தகஞ்சாரா சேவையில் மட்டும் பயன்படுத்தப்படுகின்றவையுமான கப்பல்களுக்கு இப்பாகம் ஏற்புடையதாதலாகாது. எவ்வாறாயினும், ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டவையும் அல்லது தொழிற்படுத்தப்பட்டவையும், அப்போதைக்கு, அரசாங்க வர்த்தகஞ்சாரா சேவையில் மட்டும் பயன்படுத்தப்படுகின்றவையுமான கப்பல்கள், நியாயமாகவும் செயல்முறைக்குகந்ததாகவும் இருக்கும் அளவுக்கு, இப்பாகத்துக்கு ஒத்ததாகவுள்ள ஒருமுறையில் செயலாற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

*16. ஒழுங்குவிதி 15(4) மற்றும் ஒழுங்குவிதி 15 (5) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற கப்பல்கள், வாயுக்களை அல்லது வேறு குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற கப்பல்களுக்கான சர்வதேச வாயு மற்றும் எரிபொருள் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.*

## பாகம் IX

## பொது ஏற்பாடுகள்

*17. சமவாயத்தின் அத்தியாயம் II - I இல் நிருவாகத்தின் திருப்திக்குக் குறிப்பீடுகள் செய்யப்படும் விடயத்திலும் நடைமுறைப்படுத்தல் நியமங்களினூடாகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய குறிப்பீடுகளுக்கான நேரடிப் பொருள்கோடலெதுவும் வழங்கப்படாத விடயத்திலும், வகுப்பாக்கற் சங்கங்களின் சர்வதேசக் கழகத்தின் ஒன்றுசேர்க்கப்பட்ட பொருள்கோடல்கள், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருள்கோடலாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*18. ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் (RO) அல்லது ஐக்கிய அமெரிக்க நாடுகள் கரையோரக் காவல் நிலையத்தினால் ஐக்கிய இராச்சியத்திலுள்ள கடலோரக் கரையோரக் காவல் முகவராண்மையினால் அல்லது யப்பானின் கடலோர நிருவாகத்தினால் அளிக்கப்பட்ட சாதன அங்கீகாரங்களைப் பணிப்பாளர் தலைமையதிபதி ஏற்றுக்கொள்கின்றார்; ஆயின், அங்கீகாரங்கள் சமவாயத் தேவைப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கவிருத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, ஐரோப்பிய ஒன்றியக் கடல்சார் சாதனப் பணிப்புரைச் சான்றுப்படுத்துகை நடவடிக்கை முறையின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள சாதனத்தையும் ஏற்றுக்கொள்வார்.*

*19. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது*

சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம்விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல் ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.

20. சமவாயத்தின் அத்தியாயம் II - I இலுள்ள அடிக்குறிப்புகளும் அத்தகைய அடிக்குறிப்புகளினால் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வொழுங்குவிதிகளின் பாகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

21. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படு - த்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

22. இவ்வொழுங்குவிதிகளில் -

"சரக்குக் கப்பல்" என்பது, ஒரு பயணிக் கப்பல் அல்லாத ஏதேனும் கப்பல் என்று பொருளாகும்;

"சமவாயம்" என்பது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயரிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம் மற்றும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் அத்துடன் அத்தகைய வரைவாணத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தம் என்று பொருளாகும்;

"வாயும் கப்பல்" என்பது, சர்வதேச வாயுக் கப்பற் சட்டக்கோவையின் அத்தியாயம் 19 இல் நிரற்படுத்தப்பட்டதும் தொகையாக ஏதேனும் திரவமாக்கப்பட்ட வாயுவை அல்லது வேறு தயாரிப்பை ஏற்றிச்செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்டதும் அல்லது இசைவாக்கப்பட்டதும் மற்றும் பயன்படுத்தப்பட்டதுமான ஒரு சரக்குக் கப்பல் என்று பொருளாகும்;

"IGC சட்டக்கேவை" என்பது, திரவமாக்கப்பட்ட வாயுக்களைத் தொகையாக ஏற்றிச்செல்கின்ற கப்பல்களை நிர்மாணிப்பதற்கும் அவற்றுக்குச் சாதனமிடுவதற்குமான சர்வதேசச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"IGF சட்டக்கேவை" என்பது, வாயுக்களை அல்லது வேறு குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற கப்பல்களுக்கான சர்வதேச வாயு மற்றும் பளிச்சீட்டுப்புள்ளிச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"IMO சட்டக்கேவை" என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"நீளம் (நீ)" என்பது, வலுவிலுள்ள சுமைவரைகள் பற்றிய சர்வதேசச் சமவாயத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான நீளம் என்று பொருளாகும்;

"குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருள்" என்பது, சமவாயத்தின் அத்தியாயம் II - 2 இன் ஒழுங்குவிதி 4.2.1.1 இன்கீழ் வேறுவகையாக அனுமதிக்கப்பட்டதைப் பார்க்கிலும் குறைந்த பளிச்சீட்டுப்புள்ளியைக் கொண்டுள்ள வாயுரீதியிலான அல்லது திரவ எரிபொருள் என்று பொருளாகும்;

"எந்திரத்தொகுதி இடைவெளிகள்" என்பது, உந்துகைக்காகப் பிரதானமாக உட்கருதப்பட்ட கொதிப்பான்கள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் மின்சார மோட்டார்கள் உட்பட, முக்கியமான மற்றும் துணைநிலையான உந்துகை எந்திரத்தொகுதியைக் கொண்டுள்ள ஓர் இடைவெளியின் நீர்ப்புகா எல்லைகளுக்கிடையேயான இடைவெளிகள் என்று பொருளாகும்; வழமைக்குமாறான ஒழுங்கேற்பாடுகளின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி எந்திரதொகுதி இடைவெளிகளின் வரையறைகளை வரையறுத்துக்கூறலாம்;

“ஒழுங்கமைப்பு” என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

“பயணிக் கப்பல்” என்பது, பன்னிரெண்டு பயணிகளுக்கு மேற்பட்டோரை ஏற்றிச்செல்லும் கப்பல் என்று பொருளாகும்;

“ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு” என்பது, ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள ஓர் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

“நீர்ப்புகாதது” என்பது, சேதமடையாத மற்றும் சேதமடைந்த நிலைமைகளில் இடம்பெறக்கூடிய சாத்தியமுள்ள நீரோட்டத்தின்கீழ் ஏதேனும் திசையில் நீர் செல்வதனைத் தடுக்கின்ற ஆற்றலைக்கொண்ட கப்பற் பகுதியின் கட்டளை அளவையும் ஒழுங்கேற்பாடுகளையும் கொண்டுள்ளமை என்று பொருளாகும். சேதமடைந்த நிலைமையில், வெள்ளப்பெருக்கின் இடைநிலைக் கட்டங்களுட்பட, நீரோட்டமானது மிக்க மோசமான நிலைமையில் சமன்நிலையில் கருதப்படுதல் வேண்டும்.

“காலநிலையினால் பாதிக்கப்படாதது” என்பது, எவையேனும் கடல் நிலைமைகளில் நீரானது கப்பலினுள் ஊடுருவமாட்டாது என்று பொருளாகும்;

“2008 ஆம் ஆண்டின் IS சட்டக்கோவை” என்பது, 2008 ஆம் ஆண்டின் சேதமடையாத நிலையுறுதிபற்றிய சர்வதேசச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.